# ஐக்கிய அரபு அமீரக அதிபருடன் பாரத பிரதமரின் சந்திப்பு

பிப்ரவரி 13, 2024

ஐக்கிய அரபு அமீரகத்திற்கு அரசு முறைப் பயணமாக பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் இன்று அபுதாபி சென்றடைந்தார். அங்கு விமான நிலையத்தில் அவரை ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் திரு. ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் அவர்கள் சிறப்பு வரவேற்பு அளித்தார்.

2. இரு தலைவர்களும் தனிப்பட்ட முறையிலும் மற்றும் பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். பின்னர் இருதரப்பு கூட்டாண்மையை ஆய்வு செய்த அவர்கள், ஒத்துழைப்புக்கான புதிய பகுதிகள் குறித்து விவாதித்தனர். இதில் வர்த்தகம், முதலீடு, டிஜிட்டல் உள்கட்டமைப்பு, நிதிசார் தொழில்நுட்பம், எரிசக்தி, உள்கட்டமைப்பு, கலாச்சாரம், இருநாட்டு மக்களுக்கு இடையேயான உறவுகள் உள்ளிட்ட துறைகளில் விரிவான மூலோபாய கூட்டாண்மையை வலுப்படுத்துவதை அவர்கள் வரவேற்றனர். அத்துடன் பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் அவர்கள் விவாதித்தனர்

3. இரு தலைவர்களும் கீழ்க்கண்ட ஒப்பந்தங்களை பரிமாறி கொண்டனர்:

**இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம்:** இந்த ஒப்பந்தம் இரு நாடுகளிலும் முதலீடுகளை மேலும் ஊக்குவிப்பதற்கான முக்கிய உதவியாக இருக்கும். ஐக்கிய அரபு அமீரகத்துடன் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம் மற்றும் விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் ஆகிய இரண்டிலும் இந்தியா கையெழுத்திட்டுள்ளது.

**மின்சார இணைப்பு மற்றும் வர்த்தகத் துறையில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்:** இது எரிசக்தி பாதுகாப்பு மற்றும் எரிசக்தி வர்த்தகம் உட்பட எரிசக்தித் துறையில் ஒத்துழைப்புக்கான புதிய பகுதிகளுக்கு வழிகாண்கிறது.

**இந்தியா-மத்திய கிழக்கு-ஐரோப்பா பொருளாதார வழித்தடத்தை மேம்படுத்துதல் மற்றும் செயல்படுத்துதல் தொடர்பான ஒத்துழைப்புக்கான இந்தியா, ஐக்கிய அரபு அமீரக அரசுகளுக்கு இடையிலான கட்டமைப்பு ஒப்பந்தம்:** இது முந்தைய புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பை உருவாக்கி, பிராந்திய இணைப்பை

மேம்படுத்துவதற்காக இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும்.

**டிஜிட்டல் உள்கட்டமைப்பு திட்டங்களில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்:** இது டிஜிட்டல் உள்கட்டமைப்புத் துறையில் முதலீட்டு ஒத்துழைப்பு உட்பட பரந்த அளவிலான ஒத்துழைப்பிற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்குவதுடன், தொழில்நுட்ப அறிவு, திறன்கள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்வதையும் எளிதாக்கும்.

**ஐக்கிய அரபு அமீரகத்தின் தேசிய நூலகம் மற்றும் காப்பகங்கள் மற்றும் இந்தியாவின் தேசிய ஆவணக் காப்பகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு உடன்படிக்கை:** இந்த உடன்படிக்கை ஆவணக் காப்பகப் பொருட்களை மீட்டெடுத்தல் மற்றும் பாதுகாத்தல் உள்ளிட்ட இந்தத் துறையில் விரிவான இருதரப்பு ஒத்துழைப்பை வடிவமைக்கும்.

**தேசிய கடல்சார் பாரம்பரிய வளாகத்தின் (NMHC) மேம்பாடு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம்:** இது குஜராத்தின் லோதலில் உள்ள கடல்சார் பாரம்பரிய வளாகத்தை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை ஊக்குவிக்கும்.

**உடனடி பணப் பரிவர்த்தனை தளங்களான UPI (இந்தியா), AANI (UAE) ஆகியவற்றை இணைப்பதற்கான ஒப்பந்தம்:** இது இரு நாடுகளுக்கும் இடையே தடையற்ற எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு வழிவகுக்கும். கடந்த ஆண்டு ஜூலை மாதம் பிரதமரின் அபுதாபி பயணத்தின் போது கையெழுத்திடப்பட்ட பணம் பரிவர்த்தனை மற்றும் தகவல் பரிமாற்ற முறைகளை ஒன்றிணைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இது கையெழுத்திடப்பட்டது.

**உள்நாட்டு டெபிட்/கிரெடிட் கார்டுகளை இணைப்பதற்கான ஒப்பந்தம் - ஜெய்வான் (UAE) உடன் RuPay (இந்தியா):** இது நிதித்துறையில் ஒத்துழைப்பை உருவாக்குவதில் ஒரு முக்கியமான படியாகும். இது ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும் ரூபேவின் உலகளாவிய ஏற்றுக்கொள்ளலை மேம்படுத்தும்.

4. டிஜிட்டல் ரூபே(RuPay) கிரெடிட் மற்றும் டெபிட் கார்டுகளை அடிப்படையாகக் கொண்ட ஐக்கிய அரபு அமீரகத்தின் உள்நாட்டு

அட்டையான ஜெய்வான் அறிமுகப்படுத்தப்பட்டதற்கு அதிபர் திரு. ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் அவர்களுக்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்தார். ஜெய்வான் அட்டையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனையை தலைவர்கள் பார்வையிட்டனர்.

5. எரிசக்தி ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர். ஐக்கிய அரபு அமீரகம் கச்சா எண்ணெய் மற்றும் சமையல் எரிவாயுவின் மிகப்பெரிய ஆதாரங்களில் ஒன்றாக இருப்பதுடன் திரவ இயற்கை எரிவாயுவுக்கான (LNG) நீண்டகால ஒப்பந்தங்களில் இந்தியா தற்போது ஈடுபடுவதை அவர்கள் பாராட்டினர்.

6. இப்பயணத்தையொட்டி ரைட்ஸ் லிமிடெட் அபுதாபி துறைமுக நிறுவனத்துடனும், குஜராத் கடல்சார் வாரியம் அபுதாபி துறைமுக நிறுவனத்துடனும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இது துறைமுக உள்கட்டமைப்பை உருவாக்கவும், இரு நாடுகளுக்கும் இடையேயான தொடர்பை மேலும் மேம்படுத்தவும் உதவும்.

7. அபுதாபியில் BAPS (போச்சாசன் வாசி அக்சர் புருஷோத்தம் ஸ்வாமி நாராயண் கோயில்) கட்டுவதற்கு நிலம் வழங்கியதற்காகவும், தனிப்பட்ட முறையில் ஆதரவு அளித்ததற்காகவும் அதிபர் திரு. ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் அவர்களுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார். மேலும் ஐக்கிய அரபு அமீரகம்-இந்தியா நட்புறவு, ஆழமான வேரூன்றிய கலாச்சார பிணைப்புகள், நல்லிணக்கம், சகிப்புத்தன்மை மற்றும் அமைதியான சகவாழ்வு ஆகியவற்றிற்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் உலகளாவிய உறுதிப்பாட்டின் உருவகமாக BAPS கோயில் இருப்பதை இரு தரப்பினரும் குறிப்பிட்டனர்.

**அபுதாபி**
**பிப்ரவரி 13, 2024**